சுனில் ரத்னசிரி அவர்களினால் கேட்கப்பட்ட வினா

வினாக்கள்

490/2025

கௌரவ சுனில் ரத்னசிரி, பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,

(அ) (i) "பொலன்னறுவை சிட்டி சென்டர்" இல் உள்ள மொத்தக் கடை அறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் இதுவரை குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கடை அறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) "பொலன்னறுவை சிட்டி சென்டர்" கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் அதிலுள்ள கடை அறைகளை பகிர்ந்தளித்தல் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு ஆளுநரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவை என்பதையும்;

(iv) தற்போது மேற்படி தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி கடை அறைகளை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் பொலன்னறுவை மாநகர சபைக்கு நட்டம் ஏற்பட்டிருப்பின், மேற்படி நட்டம் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

அமைச்சு	: பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
கேட்டவர்	: சுனில் ரத்னசிரி
அரசியற் கட்சி	: தேசிய மக்கள் சக்தி